உ

கலைமகள் துணை.

புதுவைக் கலைமகள் கழகத்தின்

ஆருவது ஆண்டு

அறிக்கைப் பத்திரம்.

1917.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

உ

கலைமகள் துணை.

புதுவைக் கலைமகள் கழகம்
ஆறுவது ஆண்டு
அறிக்கைப் பத்திரம்.

வெண்பா.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் – துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

கழகத்தின் இருப்பிடம்.

கலைமகள் கழகம் என்னும் இச் சபையானது விரோதிகிருது ௵ சித்திரை ௴ ௧-ம் உ வியாழக்கிழமையன்று தாபிக்கப்பெற்றது. புதுவை வேளாளர் வீதி, 4-ம் நெ. கிருகத்தை இடமாகப்பெற்றுள்ளது.

கழகத்தின் நோக்கங்கள்.

தமிழ் நூற்களை ஆராய்வதாலும், பிரசங்கங்கள் செய்வதனாலும், பத்திரிகை முதலியன வெளிப்படுத்துவதனாலும் தமிழ் மொழியை வளர்ச்சிபெறச் செய்வதே இக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

நிர்வாக சபையார்.

சபைத்தலைவர்,
கனம், பு. அ. பெரியசாமிப் பிள்ளை.

உதவிச் சபைத்தலைவர்,
,, சி. பங்காருப் பத்தர்.

காரியதரிசி,
,, தி. திருப்புளிசாமி ஐயர்.

உதவிக் காரியதரிசி,

கனம், பொன்னு - கிருஷ்ணசாமி நாயகர்.

பொருட்காவலர்,

,, சு. அண்ணாமலை முதலியார்.

கணக்குப் பரிசோதகர்,

,, இராகவ - திருவேங்கட ஐயர்.

பரிபாலனப் பிரதிநிதிகள்,

,, சி. அரங்கசாமி முதலியார்.

,, சோ. தியாகராஜ முதலியார்.

,, அ. நாராயணசாமி முதலியார்.

,, து. இரத்தினசபாபதிப் பிள்ளை.

,, கு. சிவகுருநாதப் பிள்ளை.

,, அ. பாலகிருஷ்ண நாயடு.

புத்தகசாலைக் கதிபர்,

,, து. இரத்தினசபாபதிப் பிள்ளை.

அங்கத்தவர்கள்,

,, கிரந்தே - சிவசச்சிதாநந்த செட்டியார்.

,, சேஷ - சடகோப ஐயர்.

,, பொ. வேங்கடாசல நாயகர்.

,, சா. சடையப் பிள்ளை.

,, வே. கிருஷ்ணசாமிப் பிள்ளை.

,, கோவிந்தராஜுலு ஆச்சாரி.

,, எல்லப்ப - துரைசாமி நாயகர்.

,, ச. மாணிக்கப் பத்தர்.

,, வே. இராகவப் பிள்ளை.

,, மு. இராசுப் பிள்ளை.

,, செ. இராமசாமிப் பிள்ளை.

இலிகித சமாஜிகர்,

,, சு. அ. சுப்பராயப் பிள்ளை.

கௌரவ சபாநாயகர்,

திருப்பா திரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

கௌரவ சமாஜிகர்கள்,

பிரம்மஸ்ரீ சஃ. குப்புசாமி ஐயரவர்கள்.
ஸ்ரீமான் கிரந்தே - சிவசங்கர செட்டியாரவர்கள்.
,, ஒட்டம்பாளயம், கு. வேலாயுத செட்டியாரவர்கள்.
,, கலவை, சங்கர செட்டியாரவர்கள்.
,, திருமுடி, க. நடராஜ செட்டியாரவர்கள்.
,, அ. முத்துக்குமாரசாமி செட்டியாரவர்கள்.
,, சிங்கப்பூர், சு. அண்ணாமலை முதலியாரவர்கள்.
,, டாக்டர், நாராயணசாமி நாயகோரு.
,, ஜவளி, து. சு. நன்னைய பாகவதரவர்கள்.
,, தெ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள்.
,, A. V. முத்தைய முதலியாரவர்கள்.
,, முத்தியால்பேட்டை, பச்சையப்ப முதலியாரவர்கள்.
,, கூ. மா. அண்ணாமலை செட்டியாரவர்கள்.
,, வண்டிப்பாளையம், அ. மு. அருணாசல முதலியாரவர்கள்.

கௌரவ உபன்னியாசகர்கள்,

,, S. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T., சென்னை.
,, திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், சென்னை.
,, ம. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.
,, மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், சென்னை.
,, A. V. முத்தைய முதலியாரவர்கள், புதுவை.

நடைபெறு செயல்கள்.

(1. இலக்கிய இலக்கண ஆராய்ச்சி.)

வியாழக்கிழமைதோறும் இலக்கிய இலக்கணங்கள் ஆராயப்பட்டும், ஞாயிற்றுக்கிழமைதோறும் உபன்னியாசங்கள் செய்யப்பட்டும் வருகின்றன. அன்றியும், விவேகபோதினி, பூரண சந்திரோதயம், பெண் கல்வி, சக்கரவர்த்தினி, விசுவகர்ம குலோபகாரி, சித்தாந்தம், சைவப்பிரகாசம், சைவம், லோகோப

காரி, கலாசிந்தாமணி, ஜனோபகாரி, ஞானபானு, விவேகோதயம் முதலிய பத்திரிகைகள் படிக்கப்பட்டும் வருகின்றன.

(2. கலைமகள்.)

1913-ம் ஆ ஜனவரி மீ முதற்கொண்டு இக் கழகத்தினின்றும் "கலைமகள்" என்னும் பெயரிய ஓர் தமிழ்ப் பத்திரிகை மாதந்தோறும் பிரசுரமாய்க்கொண்டு வருகின்றது.

(3. புத்தக நிலையம்.)

இக் கழகத்தின் புத்தக நிலையத்தில் சென்ற வருடத்தில் 101 புத்தகங்கள் இருந்தன. இவ் வருடத்தில் சேர்ந்த புத்தகங்கள் 33, ஆக 134 புத்தகங்கள் இப்போதிருக்கின்றன.

புத்தக முதலியன.	நன்கொடை யளித்தவர்கள்.
1. திருக்கோவையார் மூலமும், நச்சினார்க்கினியருரையும்.	புதுவை ஸ்ரீமான் அ. நாராயணசாமி முதலியாரவர்கள்.
2. பகவத்கீதை மூலமும், கூடார்த்த தீபிகை யென்னு முரையும்.	முருங்கப்பாக்கம், ஸ்ரீமான் அ. நமசிவாய நாட்டாரவர்கள்.
3. நற்றிணை மூலமும் உரையும். 4. சுந்தரகாண்ட மூலமும் உரையும். 5. வேதாரணிய புராணம். 6. பிரபுலிங்கலீலை மூலம். 7. திருவாரூர் தியாகராஜர் லீலை. 8. மெய்யறிவு. 9. ஏரெழுபது. 10. திருவருணைக் கலம்பகம் மூலம். 11. நீதிநெறி விளக்கம் மூலம். 12. மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ் மூலம். 13. ஆசாரக்கோவை மூலமும், நச்சினார்க்கினிய ருரையும். 14. உறையூர்ப் புராணம். 15. தனிப்பாடற்றிரட்டு.	அம்மனூர் ஸ்ரீமான் கு. ப. அ. க. சதாசிவம் பிள்ளையவர்கள்.

16. திருப்புன்கூர்ப் புராணம். 17. பெண்ணைநதிப் புராணம். 18. ஸ்ரீ பயறணீச்சுரர் ஸ்தல புராணம்.	புதுவை ஸ்ரீமான் சஞ்சீவி ஐயாவர்கள்.
19. தமிழ் நாவலர் சரிதை. 20. கண்ணப்பன். 21. தசரதராம சதகம். 22. மன்பதை யாற்றுப்படை. 23. முத்தக பஞ்ச விஞ்சதி. 24. திருக்கழுக்குன்ற தல புராணச் சுருக்கம். 25. பதிற்றுப்பத்தந்தாதி. 26 திருப்பேரூர் பட்டி விநாயகப்பெருமான்மீது அடைக்கலப் பதிகம். 27. சைவசித்தாந்த சாரமாகிய திரிபதார்த்த சிந்தனைப் படலம். 28. திருநீலகண்டவிநாயகர்பதிகம் 29. வேணுகோபால சதகம். 30. ஸ்ரீ சிவமகா புராணம். 31. தமிழ்ப் புலவர் வரலாறு.	கோயமுத்தூர் ஸ்ரீமான் C.K. நாராயணசாமி முதலியாரவர்கள்.
32. பிரபோதசந்திரோதயம். 33. விசுவ பிரம புராணம்.	புதுவை, கவர்ன்மெண்ட் புத்தகசாலை ஸ்ரீமான் சிங்காரவேல் பிள்ளையவர்கள்.
ஜிகினாவேலைசெய்த சரஸ்வதி படம் 1.	புதுவை ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாளவர்கள்.

இவ் வருடத்தில் இப் புத்தக முதலியன நன்கொடையளித்த அன்பர்களுக்கு எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

கழகத்திற்குப் புத்தகங்கள் இன்னும் பல வேண்டியிருப்பதால், தங்களால் இயன்ற புத்தகங்கள் வாங்கி யுதவும்படி அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

(ஐந்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம்.)

கலைமகள் கழகத்தின் ரு-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம், புதுவையில், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் வெகு விமரிசையாக நடைபெற்றது.

15 - 6 - 16. வியாழக்கிழமை காலையில் கழகத்தாரால் மணக்குள விநாயகர் கோயிலில் ஸ்ரீ விக்கினேசுவர பூசை செய்யப்பெற்றது. இரவு 8 மணிக்கு, கழக விழாவின் பொருட்டு, தமது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ வல்லி தேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தியோடு எழுந்தருளிய ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளை, கழகத்தாரும் மற்றைய அன்பர்களும் கழகத்தினின்று மங்கள வாத்தியத்தோடு சென்று எதிர்கொண்டு மிக்க வைபவமாக விழாக் கொண்டாடும் சபைக்கு அழைத்துக் கொண்டுவந்தார்கள்.

16 - 6 - 16. வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சபை கூடப்பெற்றது. விழுப்புரம் வாகீச பக்தஜன சபையார் தேவார படனம் செய்ததும், கழகத்தார் பிரார்த்திக்க, மகா ஜனங்கள் வேண்டுகோளின்படி சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்தருளினுர்கள். உடனே காரியதரிசியாரால் வந்தனேபசார பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின் வருடாந்த அறிக்கைப் பத்திரம் படித்து முடிந்ததும், அக்கிராசனுதிபதியவர்கள் அமிழ்த தாரை பொழிபதுபோல் தமது ஆரம்பப் பிரசங்கத்தைச் செய்தருளினுர்கள். பின்னர், கழகத்தின் உதவி அக்கிராசனுதிபதியும் கலைமகள் பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தரவர்கள், "தெய்வ மிகமேல்" என்பதுபற்றியும், கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப் பிள்ளையவர்கள், "தொண்டு" என்பதுபற்றியும் உபன்னியசித்தார்கள். பின்னர் அக்கிராசனுதிபதியவர்கள் அன்று நடந்த பிரசங்கங்களை எடுத்துப் பாராட்டி யாவரையும் ஆநந்தமுறச் செய்தார்கள்.

17 - 6 - 16. சனிக்கிழமை காலையில் மகேசுவரபூசை நடைபெற்றது. மாலை 4 மணிக்குச் சபை கூடிற்று. தேவார

படனம் நடந்ததும், கழகக் காரியதரிசி ஸ்ரீமான் திருப்புளிசாமி ஐயரவர்களால் "அப்பூதியடிகள்" என்பதும், சென்னை வெஸ்லி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் "உலகு, உயிர், கடவுள்" என்பதும், சென்னை பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மை யவர்களால் "பெண் மக்களின் கடமை" என்பதும் உபன்னியசிக்கப்பட்டன. பின்னர்ச் சபாநாயகரவர்கள் இப் பிரசங்கங்களை ஆதரித்துத் தேன் மாரி பொழிந்தருளினார்கள்.

18 - 6 - 16. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூட, தேவாரபடனம் நடைபெற, புதுவை, செக்ரெத்தாரியா ழெனெரால் ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியாரவர்களால் "விவேகமும், வைராக்கியமும்" என்பதுபற்றியும், சென்னை ஸ்ரீமான் வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்கள் "பற்று" என்பது பற்றியும், அம்மனூர் ஸ்ரீமான் கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளையவர்கள் "செல்வம்" என்பதுபற்றியும், திருவாரூர்க் கமலாசனி பத்திராதிபர் ஸ்ரீமான் தியாகராஜ ஞானியாரவர்கள் "பூனை" என்பதுபற்றியும் பிரசங்கித்தார்கள். பின்னர்ச் சுவாமிகள் அவ் வுபன்னியாசங்களின் நயங்களை யெடுத்துப் பாராட்டி ஆநந்தமழைபொழிந்தார்கள்.

மாலை 4 மணிக்குச் சபை கூட, தேவாரபடனம் நடைபெற்றதும், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களால் "திருவள்ளுவர்" என்பதும், சென்னை ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் கிளார்க்கு ஸ்ரீமான் S. சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L. T., அவர்களால் "சுந்தரர் சரித நுணுக்கம்" என்பதும், ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் "தமிழர்" என்பதும், பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மை யவர்களால் "விருந்தோம்பல்" என்பதும் பிரசங்கிக்கப்பட்டன. பின்னர், சபைத் தலைவராகிய சுவாமிகள் அப் பிரசங்கங்களின் அருமைகளெல்லாம் எடுத்துப் பாராட்டி, தமது முடிவுரைப் பிரசங்கமாகிய அமுதமொழியைப் பொழிந்து யாவரையும் ஆநந்தக் கடலில்

அமிழ்த்தியருளினார்கள். துறைசை ஸ்ரீமான் ஞானசம்பந்த முதலியாரவர்களால் வாழ்த்துக்கவி படிக்கப்பட்டதும், காரியதரிசியவர்களால் அக்கிராசனாதிபதியவர்கட்கும் வித்துவான்களுக்கும் மற்றவர்கட்கும் நன்றியறிந்த வந்தனம் செலுத்தப்பட்டது. குறிப்பிடத்தகுந்த கனவான்கள் பலரும் விஜயம் செய்திருந்தார்கள். தேவாரபடனத்தோடு மங்களகரமாகக் கலைமகள் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் சம்பூர்த்தியடைந்தது.

வரவு செலவு கணக்கு.

கழகத்தின் வரவு ரூபா		௧௮௭ – ௫ – ௪
கௌரவ சமாஜிகர்களுள்,		
பிரம்மஸ்ரீ சா. குப்புசாமி ஐயரவர்கள்...	வரவு ரூ	௨0 – 0 – 0
சிங்கப்பூர், ஸ்ரீமான் சு. அண்ணாமலை முதலியார் அவர்கள்...	,,	௩0 – 0 – 0
ஒட்டம்பாளையம், ஸ்ரீமான் கு. வேலாயுத செட்டியாரவர்கள்	,,	௧௪ – ௧ – ௧௮
ஸ்ரீமான் திருமுடி, க. நடராஜ செட்டியார் அவர்கள், ... ஸ்ரீமான் அ. முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்கள்	,,	௧௫ – 0 – 0
ஐவளி, ஸ்ரீமான் து. சு. நன்னையபாகவதர் அவர்கள்	,,	௧0 – 0 – 0
முத்தியாலுப்பேட்டை, ஸ்ரீமான் பச்சையப்ப முதலியார் அவர்கள் ...	,,	௫ – 0 – 0
ஸ்ரீமான் A. V. முத்தையமுதலியாரவர்கள்	,,	௩ – 0 – 0
வைத்தியம், ஸ்ரீமான் பாலகிருஷ்ண நாயகரவர்கள் நன்கொடை	,,	௨ – 0 – 0
ஆக வரவு ரூபா ...		௨௮௬ – ௬ – ௨௨
செலவு ரூபா ...		௨௭௮ – ௬ – ௧௬
இருப்பு ரூபா ...	...	௮ – 0 – ௬

கழகத்தின் கௌரவ சமாஜிகர் புதுவை ஸ்ரீமான் கிரந்தே - சிவசங்கர செட்டியாரவர்கள் தமது தனிமையில், அக்கிராசனாதிபதியவர்களுக்கும், உபன்னியாசகர்களுக்கும், கழக விழாவிற்கு வந்த வெளியூர் அன்பர்களுக்கும் போஜனாதி உபசாரணைகளைப் புரிந்தார்கள்.

மூலதனம்.

இக் கழகம் என்றும் தளர்ச்சியுறாது நின்று நடைபெறுவதற்கு மூலதனமிருப்பது ஆவசிகமன்றோ? ஆதலின், தமிழின் மாட்டு அபிமானமுள்ள ஒவ்வொருவரும் இக் கழகத்திற்கு மூலதனம் அமைக்கத் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யுமாறு விநய வந்தன பூர்வகம் வேண்டுகின்றோம்.

செய்ந்நன்றி யறிதல்.

கடந்த ஆண்டுகளிற்போலவே இவ் வாண்டு விழாக் கொண்டாட்டத்திலும், எமக்குப் பெருந் துணையாய் நின்று பல விதத்தும் உதவிபுரிந்த நமது கழகத்தின் கௌரவ சமாஜிகராகிய புதுவை ஸ்ரீமான் கிரந்தே - சிவசங்கர செட்டியாரவர்களுக்கும், மற்றக் கௌரவ சமாஜிகர்களுக்கும் இக் கழகம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

புதுவைக் கலைமகள் கழகம் என்றுங் குன்றாது நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழிபடுகின்றோம். சுபம்.

இங்ஙனம்
நிர்வாக சபையார்.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

REGISTERED N. M. 1014.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ ஜனவரி மீ	இதழ் ௧.

பத்திராதிபர்:— கி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ. 1	வெளிநாட்டிற்கு ரூ. 2
வெளியூரார்க்கு ரூ. 1¼	தனிச் சஞ்சிகை அணா 2

உள்ளுறை.

	பக்கம்.
ஐந்தாவதாண்டுக் கலைமகள் :— பத்திராதிபர்.	1
வாழ்த்துப்பாக்கள் :—செந்தமிழ்க்கவி, ஸ்ரீ K. V. இராமசந்திர ஐயர், திருவண்ணாமலை.	4
,, காஞ்சிவாசி.	4
தொண்டைமண்டல சதகம் :— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர்.	5
சற்புத்திரன் சஞ்சலம் :— ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை. ...	9
பழைய விஜயநகரத்தின் பெருமை :—ஸ்ரீ கி. பி. சேஷாத்திரி ஐயங்கார்.	13
மருத்துவப் பெட்டி :— ஓர் மருத்துவன்.	17
கல்வெட்டு :—ஸ்ரீ திரு. சுப்பிரமணியதேசிகர், காஞ்சீபுரம். ...	19
முக்திகோபநிஷத் :— ஓர் ஆரியன்.	21
நியாயமாலா :— இதோபதேசி.	22
சந்நியாச விஷயம் :— இதோபதேசி.	23

AVIS.

Madame Emilie Passagne sage - femme diplomée de l'école de médecine de Pondichéry.

Accouchement et soins à domicile.

S'adresser Rue François Martin No, 22 Pondichéry.

விளம்பரம்.

பிரசவ சிகிச்சைகளை எளிதில் மிகப் பக்குவமாய்ச்
செய்துகொள்ள விரும்புவோர்கள்,

புதுவை குவர்ன்மா வைத்திய பாடசாலையிற் கற்றுப் பரீக்ஷையில் தேர்ந்து டாக்டரிடம் செர்ட்டிபிக்கட் பெற்றவளும், மருத்துவத் தொழிலில் அதிக அநுபோகத் தேர்ச்சியுள்ளவளுமாகிய இதனடியிற் கையொப்பம்வைக்கும் எனக்கு வேண்டிய காலங்களில் தெரிவித்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்

மருத்துவ பண்டிதை,

மதாம் – எமிலி – பசான்ஞ்,

புதுவை பிரான்சுவா மர்த்தேன் வீதி

இங்கிலீஷ் தபாலாபீசுக்குச் சமீபத்திலுள்ள 22-ம் நெ. வீடு.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௫. | 1917-ம் ஆ ஜனவரி மீ | இதழ் ௧.

ஐந்தாவதாண்டுக் கலைமகள்.

சென்ற மார்கழித் திங்கள் ௩௧-ம் திகதி (31 – 12 – 1916) யோடு நமது கலைமகள் நான்கு ஆண்டுகள் நிரப்பப்பெற்று இப்போது ஐந்தாவ்தாண்டில் அழகுறப் புகுந்தனள்.

மதிக்கோ ரிதழே மலர்ந்து விளங்கும் நமது கலைமகள் வெண்டாமரை, கடந்த ஆண்டின் பிற்பகுதியில், சிறிது காலங் கடந்தும், சிலமுறை இரண்டிதழ்கள் ஒருங்கு விரியப்பெற்றும் வெளிப்பட நேர்ந்தது. கையிருப்பாயிருந்த காகிதம் செலவாய் விட, சிலமாதம் அப்போதைக்கப்போது விலைகொடுத்துப் பெற நேர்ந்ததில், காலத்தோடு காகிதம் கிடைக்காமற்போனமையே அதற்குக் காரணமாகும். மேல்நாட்டுப் போர் காரணமாக ஏற்பட்ட காகிதப் பஞ்சத்தை உலகில் எவரே அறியாதவர்? இப்போது கூடியவரையில் கையிருப்பாக உயர்ந்த காகிதம் அதிக விலைகொடுத்துப் பெற்று வைத்திருத்தலின், இவ்வாண்டில் அக்குறை நேராதென்றே நினைக்கின்றேம். இனி நம் செல்வக் கலைமகள் தமிழுலகெங்கும் தமிழ்மணம் பரப்பி ஒவ்வொரு மதியிலும் உலவுவளென்க.

நல்ல செயல்கள் எல்லாவற்றையும் தொன்மை யுலகில் தோற்றுவித்து, இடையூறு புகாமல் இனிது காப்பவன் எல்லாம் வல்ல இறைவனாதலின், இறைவனை முதற்கண் இறைஞ்சுகின்றேம்.

அன்பர்க ளென்னும் அளவில் பயிர்கள்
வாட்ட மகன்று வளம்பெறற் பொருட்டு
அருமைசேர் கல்விப் பெருமழை பொழிந்து
வீறு கொண்டு விளங்கு முகில்களாம்
ஓதநீர் சேர் திருப் பாதிரிப் புலியூர்ப்
புகழ்மிகு சிவசண் முகமெய்ஞ் ஞான
சிவாசா ரியனெனுந் தேசி கோத்தமன்
துகளில் கோயி லூர்ச் சுப்பைய முனிவன்
என்னும் பெரியோ ரின்னருள் பெற்று
நிலவு கின்றவள் கலைமக ளாதலின்
அன்னவர் தமது பொன்னந் திருவடி
மலர்வழி பாடு மறக்கற் பாற்றே!

கழிந்த ஆண்டில், தாம் அரிதிற்றேடிய அரும்பெரும் பொருள்களைக் கலைமகட்களித்த கலைவலார் தமக்கும், கலைமகளை அன்புகூர்ந்து ஆதரித்த சந்தாநேயர்களுக்கும், கலைமகள் வளர்ச்சியைக் கருதிய மற்றைய அன்பர்களுக்கும், நமது கலைமகளுக்குப் பிரதிபாகத் தமது பத்திரிகைகளை நமக்கனுப்பி அன்புபாராட்டிய பத்திராசிரியர்கட்கும் நன்றிசெலுத்துதல் நமது கடமையன்றோ!

மேல்நாட்டில் நடைபெறும் பெரும்போர் காரணமாக, காகித முதலியன ஒன்றுக்கு நான்காக விலையேறிவிட்டதுமன்றி அவை எளிதில் கிடைப்பதும் அருமையாய்விட்டன. அதனாலேயே மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலும் சில பத்திரிகைகள் நடைபெறாமல் நின்றுவிட்டன. சில பத்திரிகைகள் பக்கங்கள் குறைக்கப்பெற்றன. விலையேற்றப்பெற்றன சில. ஆதாரவற்றுத் தவிக்கின்றன பல.

செந்தமிழ்ச் செல்வர்காள்! இப்படிப்பட்ட காலத்தில் பத்திரிகை நடத்துவது என்றால் எவ்வளவு வருத்தமாயிருக்கு

மென்பதை நீங்கள் எண்ணிப்பாருங்கள். இவ் வருத்தத்தை நோக்கியே இவ்வாண்டில் கலைமகளை நிறுத்திவிட யாம் எண்ணினதுண்டு. ஆனால் அதற்கு மனம் துணியவில்லை. பெரியோர்களும் ஒப்பவில்லை. அன்பர்களும் அக் கருத்துக் கிசையவில்லை. உலகத்தில் ஒரு நல்ல காரியம் தோன்றுவதே அருமை. தோன்றினும் நீண்டநாள் நிற்பதருமை. ஏதோ திருவருட் செயலால் இப் புதுவையில் அருமையாகத் தோன்றி நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுவந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையைச் சிறிது வருத்தத்திற்காக நிறுத்திவிடுவதென்றால் யாருக்குத்தான் மனந் துணியும்?

அறிஞர்காள்! நீங்களெல்லீரும் தமிழ்த் தாய்க்குக் கடமைப் பட்டவர்களல்லவா? தமிழை வளர்க்கவேண்டியவர்களல்லவா? தமிழ்ப் பத்திரிகையை எவ்விதத்தும் ஆதரிக்கவேண்டியவர்களல்லவா? தாய்மொழிமாட்டுப் பற்றில்லாதவர்களும் உலகி லுண்டோ? அப்படிப்பட்டவர்கள் பதர்கள் என்றன்றோ ஒதுக்கப்படுவார்கள்! தாய்மொழிக்காக ஆண்டிற்கு ஒரு ரூபா கொடுக்க விரும்பாதவன் தமிழனாவானோ? இத் தமிழ்நாட்டில் தமிழ் தமிழ் என்ற கிளர்ச்சி எங்கும் பொங்கிக்கொண்டிருக்கும் இக் காலத்தில், தமிழ் வளர்ச்சி கருதிய பத்திரிகை யொன்று ஆதரவற்று நின்றுவிட்டதென்றால், அது தமிழர் அனைவர்க்கும் அவமானத்தைத் தரும் செயலென்பதை உணராதவரும் உளரோ? அன்றியும் வர்த்தகம் முதலியன குறைந்து வருத்தத்தைத் தரும் இக் காலத்தும் உலகில் எச் செயல்கள் செய்யாமல் நிறுத்தப்படுகின்றன? ஆகவே யாம் எதற்கு அஞ்சவேண்டும்?

அன்பர்காள்! இக்காலத்திலும் யாம் பத்திரிகை நடாத்தத் துணிந்திட்டோம். சில பத்திரிகைகட்குப்போல் நாம் நமது கலைமகட்கு விலையேற்றவுமில்லை. விலையேற்றுவிடின் பொருளழிவு நேருமே என்று நீங்கள் நினைக்கலாம். அஃதுண்மையே. பொருளழிவு வாராதிருக்க உங்களை நாம் வேண்டிக்கொள்வதொன்றுண்டு. அதாவது, நீங்கள் ஒவ்வொருவரும் கலைமகளுக்குச் சந்தாநேயர்களாயிருப்பதுமன்றி, கூடியவரையில் புதிய சந்தாநேயர்களைச் சேர்த்தும் தரல்வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள்

வழியாக ஐந்து பெயர்க்குக் குறையாமல் சந்தாநேயர்களைச் சேர்த்துத் தந்தால் அதுவே கலைமகளை எவ்வளவோ ஆதரித்ததாக முடியும். பொருளழிவுக்கும் இடமிராது. அப்படிச் செய்வது ஒரு பெரிய காரியமல்லவே. அதற்குப் பணச்செலவுமில்லையே. இவ்விதமாக நீங்கள் ஆதரிப்பீர்களென்று நம்பியே விலையையுயர்த்தாமலே இப்போது பத்திரிகையை நடத்தத் துணிந்தோம். கலைமகளை நடத்துவது எமது கடமை, நடத்தச்செய்வது உமது கடமை.

பத்திராதிபன்.

வாழ்த்துப்பாக்கள்.

வெண்பா.

பொன்னஞ் சிறையன்னம் புல்லும் புலப்புதுவை
மன்னுங் கலைமகளின் வாழ்வோங்க — அன்னதைப்
பாரோர்க் குதவிவரும் பங்காருப் பாவலனற்
சீராற் பெருக சிறந்து.

புத்தியொடு கல்விப் புலமை பொறைஞானம்
பத்தியொடு முத்தி பரந்தனவே — சித்திபெறும்
பங்காரு பத்தர் பரிந்தூட்டும் பாமகளான்
இங்கா ருவமை யியம்பு.

சேந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்,
திருவண்ணாமலை.

ஆசிரியப்பா.

பத்தருக் கருளும் பாமறு மெந்தை
பாதந் தன்னை பணிந்து பரவிடும்
கற்றோர் முதலாக் கவின்ற குணநிறை
பற்றிறத் தவரும் பலகா லுணக்கக்
களிப்பைத் தருவது கலைமக ளன்றே!
மாதவர் போற்றும் பாதிரிப் புலியூர்
வதமி லாத்திரு வெழிலுடை ஞான
போதகன் முதலாம் பொற்புடைப் புலவர்

என்முக மாக வினிதுணர் விடயம்
வண்மை வசனமா வரைந்திடப் பெற்றுக்
கண்போன் றிமைப்பது கலைமக ளன்றே!
அறிவோ ரறிவை யற்புத வளர்ப்பது
நெறிவழி நாடு நேர்மை நவில்வது
நயமை நீக்கிக் கருணை கனிப்பது
நயனுடை காவலர் நாடொறும் போற்றக்
கசடற் றொளிருங் கலைமக ளன்றே!

அதனால்,

அந்தமி லழகொடு மண்ண லருளொடுஞ்
சிந்தையிற் சிவனுஞ் சிறப்புண்டக் கலைமகள்
தன் றுத லின்றிக் களிப்புடன் வாழிய!
இத்தகை மகளை யின்புட னீயுஞ்
சிந்தா மணியே முதலாச் சிறப்புடை
சுந்தா நலங்கிளர் நன்னூற் பலவு
நன்று யோர்ந்த நவையறு புலமைப்
புதுவைப் பதிவாழ் புண்ணியப் படிவப்
பங்கா ரெனப்படு பாவல சியம்
மங்குற லின்றி மன்னிவாழ் குகவே.

காஞ்சிவாசி.

தொண்டைமண்டல சதகம்.

கணிகண்ணர்.

"பின்போர் தமைக்கண்டு பாவித்த தோவன்றிப் பின்புவந்தோர்
தன்போ னடக்கப் பணிப்பித்த தோதமிழ்க் கேயிரங்கி
முன்போம் புலவற்குப் பின்போயி னுறு முகுந்தனிது
வன்போ மனத்தினி லன்போசொல் லீர்தொண்டை மண்டலமே. (29)

பொழிப்புரை.

வித்துவஜனரை எல்லாவிதத்தாலும் உபசரித்து மகிழ்விக்கும்இயற்கையையுடைய தொண்டைமண்டல வேளாண்குடிப் பிறந்த முன்னோர் வழி, அவ்வாறு ஒழுக்கம்பூண்டு பின்பு அக்காலத்திருந்த வேளாண் மக்களைக் கண்டு தாலும் அப்பாவனைபூண்டமையாலோ, அவ்வாறன்றிப்

பிற்காலத்து அவ்வொழுக்கம் விழுப்பமுடையதென்த் தான் ஆமோதித்துத் தானுமவ்வாறு ஒப்புரவொழுகித் தாபித்த வியல்போ, அன்றிப் பின்னோர் இவ்வொழுக்கம் முன்னோ ரொழுக்கமாத்திரை' யன்றித் தெய்வ சம்மத வொழுக்கமாமெனத் தேறிப் பின்பற்றி யொழுகுதற் பொருட்டோ! யாதென வறிந்திலம். காஞ்சிபுரத் தெழுந்தருளிய திருமாலானவர், செந்நாப்புலவர் கணிகண்ணருடன் காஞ்சிபுரத்தைத் துறந்து குடந்தையிற் சென்றிருந்தனர். திருமால் இவ்வாறு சென்றது அரசனிடத்து வயிரங்கொண்டமையாலோ, புலவரிடத் தன்புகூர்ந்தமையாலோ; அறிவுடையோரே சொல்லுங்கள். இவ்வாறு கடவுளரும் பின்பற்றும் ஒழுக்கமுடையோர்க்கிடமாகியது இத் தொண்டைமண்டலமேயாம்.

வரலாறு.

திருமாலிடத்து மெய்யன்புடைய *திருமழிசை யாழ்வார் (பக்திசாரர்) யோகத் தமர்ந்திருந்த காலமொன்றில், அவ் வாழ்வார்பால் தொண்டுபூண்ட †கணிகண்ணர் என்னும் புலவரொருவர், அக்காஞ்சியில் உஞ்சவிருத்திசெய்து ஜீவித்து வந்தனர் இங்ஙனம் நிகழ்ந்துவருமிடையில் அப்போது காஞ்சிபுரத்தைப் பரிபாலித்துவந்த பல்லவராயன் என்னும் அரசன் கணிகண்ணர் தமது அரண்மனையிடத்து வந்திருந்தபோது அவரை நோக்கி, "உமது ஆசிரியர் திருமழிசை யாழ்வாரை நமது அரண்மனையில்வந்து சேவைசாதிக்கும்படி செய்யவேண்டும்" என்று கூற, புலவர், "ஆழ்வார் ஒருவரகத்துக்கும் வாரார்" என்ன, ஆயின், "நீரேனும் எம்மேற்பாடுக" என அவர்,

"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லன்
ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப் பிரானெனக் கேயுளன்
சாய்கொண்ட விம்மையுஞ் சாதித்து வானவர் நாட்டையும்
நீகண்டு கொள்ளென்று வீடுந்தரு நின்று நின்றே."

---

* இவர், பார்க்கவமுனிவர்பால் உற்பவித்துத் தொண்டைநாட்டில் திருமழிசையில் திருவாளன், பங்கயச்செல்வி என்பார் வளர்க்கவந்தவர். நாலாயிரப் பிரபந்தத்துள்ள திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி, இவர் செய்த நூல்கள். இவர் முன் சைவராயிருந்து பின் வைணவம் தழுவினவர்.

† இவர், திருமழிசையாழ்வார்பாலன்புற்றுப் பாலமுது கொடுத்து வந்த கிழவருக்குத் திருவருள் சாதிக்கப் பிறந்தவர். திருமழிசை யாழ்வார்பால் அருளுபதேசம்பெற்ற பேரன்பர்.

என்றமையால், நாம் நரஸ்துதி செய்யோம் என்ன, §பல்லவராயன், “நீர் நரஸ்துதி செய்யீராயினும், எம்மைமட்டுமேனும் பாடவேண்டும்” என்று நெருங்கிவேண்டவும், அவர்,

“ஆடவர்க ளெங்ங னகல்வா ரருள்சாந்து
பாடகமு மூரகமும் பாம்பணையும் – நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் பொழிற்கச்சி மாண்பு.”

என்று பாடினார். அது கேட்டு அரசன், “நீர் எம்மைப்பாடாது இங்ஙனம் பாடியதென்னை?” என்று சினந்து அவரைத் தனது நாட்டைவிட்டேகுமாறு ஏவினன். கணிகண்ணர் அவ்விதமேயென அரசனிடத்து விடைபெற்று நிகழ்ந்த விஷயத்தைத் தமது ஆசிரியரிடத்து விளம்பினர். ஆழ்வார், “நீர் போம்போது நாமும் பெருமாளும் இங்கிரோம்” என்று கணிகண்ணரிடங் கூறி, தாம் பெருமாளை நோக்கி,

“கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா – துணிவுடைய
செந்நாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.”

என்னுந் திருவெண்பாவைக்கூற, உடனே பெருமாள் அவர்பின் எழுந்தருளினர். தட்சணமே காஞ்சிபுரத்தின் ஆலயங்களிலுள்ள கடவுளரும் உடன்செல்ல, முன்னம் ஐயன்வனஞ்செல்ல அயோத்தி பொலிவிழந்தமை போல, இந்நகரும் கயங்கள் நீர் சுவறிக் காவிற்றருக்களும் வாட்டமுற்று உதயாஸ்தமனமின்றி இருண்மூடிப் பொலிவிழந்தமையை அரசனும் கண்டு, அமைச்சர் முதலியோரோடு சென்று, இறைவன் ஓரிரவு தங்கிய காரணம்பற்றி “ஓரிரவிருக்கை” யென வழங்கும் இடத்தில் கணிகண்ணரைப் பணிந்து குறையிரந்து வேண்ட, அவரும் தம் ஆசிரியர்பால் அதனை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வார் அவரது விண்ணப்பத்திற்கு அருள்கூர்ந்து, அடியருக்கெளிய சொன்னவண்ணஞ் செய்த தேவனை அடிதொழுது,

---

§ இவன், சைவப்பற்றுக்கொண்டு பிராமணர்களிடத்தில் விசுவாசம் வைத்திருந்தானென்றும், இவன்காலத்தில் [illegible]சித்த பன்னிரண்டு ஆழ்வார்களில் திருமழிசை யாழ்வாரும் ஒருவரென்றும், இவரருளிய பாசுரங்களில் சைவசமயிகளுக்குப் பொருத்தமாகாத திருவிருத்தங்களிருக்கின்றனவென்றும், இவ்வாழ்வார் கச்சியிலிருந்தகாலத்தில் மதச்சண்டை நேர்ந்திருக்கிறதென்றும், ஆனதால் இவரை இந்நகரினின்றும் வேறிடம் போகுமாறு உத்தரவு செய்தானென்றும் வழங்குவர்.

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவனியான் செல்லகில்லே னீயுமுன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்."

என்று கூற, அப்படியே அங்குச் சயனித்தருளினரென்ப. இச்செய்யுள் பலவித பாடபேதத்துடன் வழங்குகின்றது.

இச்சம்பவத்தை,

"முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினும்
கற்றான்பின் சென்ற கருணைமால்" (தனிப்பாடத்திரட்டு.)

எனக் காளமேகப்புலவரும்,

"திருவொன்றி விளங்கிய அண்டர்கள்
மனையின்றயி ருண்டவ னெண்டிசை
திகழும்புகழ் கொண்டவன் வண்டமிழ் பயில்வோன்பின்
றிரிகின்றவன்" (திருப்புகழ்.)

என அருணகிரிப் பெருந்தகையும்,

"பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே"

(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.)

எனக் குமரகுருபர சுவாமிகளும்,

"மன்னனைப்பா டாமற்போ கின்றே னீயும்
வாவரியே யென்றழைத்த புலவன் பின்னே
பன்னகப்பாம் பணைசுருட்டிக் கொண்டே யேகிப்
படித்துக்கோ ளென்றமட்டிற் படுத்துக் கொண்டாய்
சொன்னவண்ணஞ் செய்தபெரு மாளா மென்று
சுரர்துதிக்கக் கச்சியினி ருக்கின் றாயால்."

"முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே — யன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணாமற் று."

எனப் பிறரும் எடுத்தாண்டுள்ளனர்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௪, இதழ் ௧௧ – ௧௨, 237-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏழுநாள் எனக்குப் போலீஸ் காவல். ஜாகை போலீஸ் ஸ்டேஷன். உணவுக்கு என் சொந்தச் செலவு. எட்டாம்நாள் இன்ஸ்பெக்டர் வந்தார். “மிஸ்டர் ஜனகராஜ்! நீர் சுதந்தரவாளாய்விட்டீர், நீர் போகலாம்” என்றார். அத்தனைநாள் நான் போலீஸ் காவலில் இருக்கும்படி நேரிட்ட காரணத்தை விவரமாகத் தெரிவிக்கும்படி இன்ஸ்பெக்டர் அவர்களை வேண்டினேன். அவரும் அவ் வேண்டுகோட் கிணங்கினார்.

“நீர் புறப்பட்ட மறுநாட் காலை, சாவித்திரி அவள் அணிந்திருந்த நகைகளோடும் வீட்டிலிருந்த சுமார் 100 ரூபாய் ரொக்கத்தோடும் காணாமற்போனமையைப்பற்றி அவள் மாமன் போலீசாருக்குத் தெரிவித்து உம்மீது சந்தேகமிருப்பதாகவும் சொன்னார். போலீஸ் அதிகாரிகள் நீர் நாகபுரம் சேர்ந்தவுடனே உம்மைப் பிடித்து விசாரிக்கும்படி எனக்குத் தந்தி கொடுத்தார்கள். நீர் வந்தவுடனே எனக்குத் தெரிவிக்கும்படி உமக்கு உத்தியோகமளித்த வர்த்தகசாலைத் தலைவருடனே நான் ஏற்பாடு செய்திருந்தேன். ஷண்முகபுரிப் போலீசார் ரெயில்வே போலீசாருக்கும் தந்தி மூலமாக விஷயத்தைத் தெரிவித்தார்கள். ஆகையால் ரெயில்வே போலீசார் ஏற்பாட்டின்படி, உம்மோடுகூட பெஜவாடாவுக்குப் பிரயாணமாகச் சென்ற செட்டியாரும், நீரும், மற்றும் பல பிரயாணிகளும் தந்திரமாக விசாரிக்கப் பெற்றதில், உம்மோடு சாவித்திரி வந்தாள் என்று நம்பச் சற்றும் இடமில்லாமற்போய்விட்டது. நீர் வந்தவுடன் நானும் என் விசாரணையை ஷண்முகபுரிக்குத் தெரிவித்தேன். அல்லாமலும் சாவித்திரியின் மாமன் மீண்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து “சாவித்திரியை ஜனகராஜ்தான் அழைத்துச் சென்றாரென்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அப்படிக் குற்றஞ் சாட்டுவது அபாண்டமாயிருக்குமோ என்றும் நான் பயப்படுகிறேன். எனக்கு அந்தச் சாவித்திரி அடங்காமல், எங்கேயாவது தான் ஓடிப்போய்விடுவதாக அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாளாகையால், அவளே தனியாக எங்கேனும் ஓடிப்போயிருப்பாள் என்று நினைக்கிறேன். ஜனகராஜைச் சந்தேகித்ததில் யாதொருவிதத் தப்பும் ஏற்படவில்லை யாகையால் அவரை உடனே

விடுதலைசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார். அப்படியே எனக்கும் உத்தரவு கிடைத்தது. ஆகையால் நீர் போகலாம்." என்று இன்ஸ்பெக்டர் என்னை விடுதலைசெய்தார்.

ஆசிரியனுரை :— ஜனகராஜன் பழைய வர்த்தகசாலைத் தலைவரை மீண்டும் காணச்சென்று உத்தியோகங் கேட்டான் — "போலீசாரால் சந்தேகிக்கப்பட்டவர்கள் எனக்கு வேண்டியதில்லை" என்று துரை பதில் சொன்னார் — ஜனகன் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வந்து முறையிட்டான் — இன்ஸ்பெக்டர் கொஞ்சம் தயாளகுணமுள்ளவர் — ஆகையால் அவர் நமது சற்புத்திரனுக்காக மிகப் பரிந்து பேசி துரையிடம் சிபார்சு செய்தார் — முன்பு சொன்ன 75 ரூபாய் சம்பளம் கொடுக்கமுடியாதென்று கூறி, ஆனால் இன்ஸ்பெக்டருக்காக, ஜனகனுக்கு 50 ரூபாய் சம்பளத்தில் உத்தியோகங்கொடுக்கத் துரை சம்மதித்தார் — உத்தியோகத்தில் அமர்ந்தவுடன் ஜனகனுக்குத் தன் தங்கை காந்திமதி எழுதிய ஒரு கடிதம் கிடைத்தது.

கதாநாயகனுரை :— கடிதத்தைப் பிரித்து வாசித்தேன். நான் எனதூரைவிட்டுப் புறப்பட்ட மறுநாள் எனது வீட்டு விலாசத்திற்கு வந்த கடிதம், பரிபூரணத்தம்மாள் வந்து சொன்ன சமாசாரம், வீட்டில் நிகழ்ந்த குழப்பம், என் அம்மாளது அபார சஞ்சலம், கடுங்கோபம், ஊர் முழுவதும் என்னைப்பற்றித் தூறும் நிந்தைப் பேச்சு முதலிய எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாகக் காந்திமதி அக் கடிதத்தில் எழுதிக் கடைசியில் பின்வருமாறு முடித்தாள் :—

"பரிபூரணத்தம்மாள், தெருகூரத்தம்மாள் முதலிய ஊரா ரெல்லோரும் சொல்வதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அம்மாள் உங்களிடம் கொண்டிருக்கும் அடங்காக் கோபமும், உங்கள் செய்கையைப்பற்றி அவள் நினைத்து நினைத்தேங்கி, யார் எவ்விதமாகத் தேற்றினுந் தேறாமல் பைத்தியங்கொண்டவளைப்போ லிருப்பதும் அண்ணா! என்னால் சகிக்கக் கூடவில்லை. சாவித்திரிக்கும் உங்களுக்கும் இவ்விதமான பாசம் ஏற்பட்டிருக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை, ஒருவரும் நினைக்கவில்லை. அப்படிப் பாசம் ஏற்பட்டிருந்தபோதிலும், இவ்வளவு உணவு அருந்தினாற் போதும் இன்ன உடையை உடுத்திக்கொள்ளவேண்டும் என்று தானே நிர்ணயிக்கக்கூடிய வெகு அற்ப விஷயங்களையும் அம்மாளுடைய சொல்லுதவி யில்லாமல் தீர்மானிக்கத்தக்க மனோதிடமில்லாத நீங்கள் இவ்வளவு துணிகரமான காரியஞ் செய்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் யௌவனத்தில் காதலின் சோதனைகள்

அப்படித்தானிருக்கும். நான் உங்களுக்குப் பின் பிறந்த தங்கையாயிருந்தாலும் இவ் விஷயத்தில் உங்களைவிட அதிக அநுபவமுள்ளவள். காதல் என் கண்களை மூடிவிட்டதனாலல்லவா, நீங்கள், அம்மாள், அப்பா ஒருவருக்கும் பிரியமில்லாதிருந்தபோதிலும், என்ன குடிமுழுகிப்போனாலும் நான் அவரையே கலியாணஞ்செய்துகொள்ளுவேன் என்று ஒரே பிடிவாதஞ்செய்து உங்கள் மைத்துனரை மணந்து நான் இப்பொழுது அவரோடும் குழந்தைகளோடும் உங்களுக்கும் அம்மாளுக்கும் தள்ளக்கூடாத பெருஞ்சுமையாக இருந்துகொண்டு உங்கள் கஷ்டங்களுக்கெல்லாம் முக்கிய காரணமாயிருக்கிறேன். காதல் விநோத விநோதமான எண்ணங்களை எழுப்பும். ஆகையால்தான், சாவித்திரி நைம்பெண்ணாயிருந்தாலும் அவளைக் காதலிப்பது குற்றமல்ல, அவளோடு கடிதப் போக்குவரவு வைத்துக்கொள்வதும் குற்றமல்ல, அவளுக்கு உங்கள் மோதிரத்தைக் கொடுத்துவிட்டு, அது சமுத்திரத்தில் விழுந்துவிட்டது என்று பொய்சொல்வதும் குற்றமல்ல, அவளை ரகசியமாக நாகபுரம் அழைத்துப் போவதும் குற்றமல்ல என்று நீங்கள் எண்ணியிருக்கவேண்டும். உங்களைப்போலவே சாவித்திரியும் எண்ணியிருக்கவேண்டும். இவைகள் காதல் காட்டும் விநோதங்கள். ஆனால் உங்கள் துணிவு அம்மாளுடைய நெஞ்சை எவ்வளவு வேதனையாகப் புண்படுத்தும் என்ற உணர்ச்சியைக்கூடக் காதல் கவிழ்த்துவிட்டதைத்தான் பொறுக்கமுடியவில்லை. உங்களை நோவதில் என்ன பயன்! காதலின் தன்மை அதுதான். தாய், தந்தை, சகோதரிகள், சகோதரர்கள், பந்துக்கள், மித்திரர்கள், எட்டுத்திசையும் படர்ந்துள்ள பெருங்கீர்த்தி, அதிசயச் செல்வாக்கு, மிகச் செழிப்பான அதிவிஸ்தீரண ராஜ்யம், தன் உயிர் முதலிய யாவற்றையும் துரும்பிலும் துரும்பாகக் கருதித் துறக்கச்செய்யும் சக்தி வாய்ந்தது காதல். காதலின் தன்மையை நான் நன்றாய் அறிந்தவள். ஆகையால் எனக்கு உங்களிடம் வெறுப்புமில்லை கோபமுமில்லை. ஆனால் என்னைப்போலில்லை அம்மாள். பாலியத்தில் நமது முதல் அம்மாள் மனோன்மணியம்மாளுக்கும் நமது தகப்பனாருக்கும் இருந்த காதலும், அவர்களுக்கு நிகழ்ந்த விசித்திரமான கல்யாணமும், அந்த அம்மாள் சாகும்பொழுது சொன்ன வார்த்தையும், நமது பாட்டனார் பிடிவாதத்தால் அந்த வார்த்தையை நிறைவேற்ற முடியாமல் நமது தகப்பனார் திருவாவடுதுறைக்குப் போனதும், பின்பு மாமனார் வீட்டுக்குப் போனதும், பெண் கேட்டதும், அப்பொழுது நமது அம்மாள் ஆண்டாளம்மாள் அவரையே கலியாணஞ்செய்துகொள்வதாக அழுதழுது பிடிவாதஞ்செய்ததும், அந்த அம்மாள் அறியாதனவல்ல. இவைகளை ஆலோசித்து, காதலின் சோதனைகளின் கடுமையை உணர்ந்து

அம்மாள் உங்களை மன்னிக்கலாம். ஆனால் கணவனையிழந்த ஒரு பெண்ணினிடத்து நீங்கள் காதல் செலுத்தி வளர்த்தத் துணிந்ததுதான் அம்மாள் கோபத்தையும் துக்கத்தையும் பொங்கச்செய்கிறது. "ஐயோ கலியாணமாகாத வேறு எந்தப் பெண்ணாயிருந்தாலும் ஒருமாதிரி ஆறிவிடுவேன். இருந்திருந்து கைம்பெண் பாவத்தையா கொட்டிக்கொண்டான்" என்று புலம்பிப் புலம்பி ஏங்கி அழுகிறாள். ஆகையால் உங்கள் உத்தியோகம் என்ன கதியானாலும் ஆகட்டும். நீங்கள் உடனே புறப்பட்டு இங்கே வாருங்கள். அம்மாள் இருக்கிற கோலத்தையும் படுகிற பாட்டையும் பாருங்கள். அப்பொழுது உங்கள் காதலின் உருக்கமும், அம்மாளிடம் நீங்கள் கொண்ட அன்பின் உருக்கமும் போராடும். அந்தப் போரின் முடிவு எப்படியேனும் ஆகட்டும். அதன் பிறகு உங்களிஷ்டப்படி செய்யுங்கள். இன்னும் அதிகமாக எழுத எனக்குத் தெரியவில்லை. உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

உங்கள் அன்புள்ள தங்கை

காந்திமதி."

கடிதத்தை மூன்றுமுறை வாசித்தேன். மடித்துச் சட்டைப் பையிலிட்டேன். சாவித்திரி, எனக்கெழுதிய கடிதமும், மோதிரம் அவளிடம் இருப்பதாகக் கூறியுள்ளதும் எனக்குப் பெரு வியப்பைத் தந்தன. என் அம்மாள் படும் கஷ்டம் ஒரு பக்கம் என் மனத்தை அரித்துத் துன்புறுத்திற்று. நான் சாவித்திரியை அழைத்துவந்துவிட்டதாகப் பரவிய அபாண்டமான வதந்தியை நினைக்கச் சிரிப்பும் வந்தது. காதலைப்பற்றிக் காந்திமதி தந்த விஸ்தரிப்போ, குழந்தைக்குத் தித்திப்பு ருசி காட்டுவது போல, பூனைமுன்பு நெய்மணம் வீசுவிப்பதுபோல, நல்பாம்பின்முன்பு புன்னாகவராளி இராகத்தை வாத்யத்தில் வாசிப்பதுபோல என் நெஞ்சைத் தாக்கிற்று. நெடுநாளாக அங்கே தூங்கிக்கொண்டிருந்த ஒரு கிளர்ச்சியைத் தட்டி எழுப்பி நர்த்தனம்செய்வித்ததுபோ லிருந்தது. சாவித்திரியின் உருவம், அவள் தன்மை, அவள் குரல், அவளோடு பழகிய பழைய நாட்கள், அவளைப் பிரிந்தமை, காந்திமதியின் காதல் வருணனை, இவற்றைச் சார்ந்த சிந்தனைகள் கலந்து குலவ, விழித்துக்கொண்டே இன்பமும் ஏக்கமுங் கலந்த ஓர்வித விசித்திரக் கனவில் மயங்கினேன். ஆனால் இவை யாவும் சிறிது நேரந்தான் வாழ்ந்தன. பின்பு வியப்பு, சிரிப்பு, மயக்கம் மூன்றும் கரைந்தன. என் அம்மாள் மனோ நிலைமையைப்பற்றியும் 'சாவித்திரியின் கதி என்னவாயிற்றோ என்பதைப்பற்றியும் எழுந்த கவற்சியொன்றே என் சிந்தையுள் அடர்ந்து என்னை வருத்திற்று.

ஆசிரியனுரை :— காந்திமதியின் கடிதத்திற்குப் பதிலாக ஜனகன் தன் அம்மாளுக்குக் கடிதம் எழுதினான் — இரண்டு வருடங்களாகச் சாவித்திரிக்கும் தனக்கும் யாதொருவித சம்பந்தமுமில்லை யென்றும், சாவித்திரியின் கடிதமும் மோதிர விஷயமும் தனக்குப் பெரு வியப்பைத் தருவதாகவும் கடிதத்தில் பிரமாணிக்கஞ் செய்தான் — நாகபுரத்தில் போலீஸ் விசாரணையில் தான் பட்ட கஷ்டங்கள், வெகு சிரமத்தினாலும் சிபார்சினாலும் தனக்கு உத்தியோகங் கிடைத்தமை, சம்பளம் 50 ரூபாயாகக் குறைந்தமை ஆகிய எல்லாவற்றையும் தெரிவித்து, சாவித்திரி எங்கேயிருக்கிறாளோ என்பது தனக்குப் பெரிய கவலையாயிருப்பதால், அதை ஆராய்ந்தறிவதற்கே உடனே தான் ஷண்முகபுரிக்கு வர, தன் அம்மாள் அனுமதியையும் கேட்டெழுதினான் — ஆண்டாளம்மாள் அக் கடிதத்தைப் பார்த்துத் திருப்தியடைந்து தன் மகனை முன்பு தான் நிந்தித்ததற்காகத் தன்னைத் தானே நொந்துகொண்டாள் — ஆனால் ஜனகன் ஷண்முகபுரிக்குவர உத்தரவுகொடுக்கவில்லை — சாவித்திரியின் நிலைமை எப்படியிருக்கிறதோ என்று ஜனகனுக்குத் தீராக் கவலை — இவ்வாறு ஐந்து மாதங் கழிந்தன — ஒருநாள் நாகபுரத்து வீதியில் ஜனகன், முக்காடிட்ட இரண்டு பெண்களைச் சந்தித்தான் — அவர்களில் ஒரு பெண் இவனை நோக்கினாள் — இவனும் அவளை நோக்கினான். இவர்கள் இருவர் குரலும் ஏகமாக ஒலித்தன. "சாவித்திரீஇ!" என்று கூவினான் ஜனகன். "அம்மணீஇ" என்ற மொழியுடன் சோவென அழுது, தன் இரு கரங்களாலும் ஜனகன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் பெண். அந்தப் பெண்தான் காணாமற்போன சாவித்திரி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

பழைய விஜயநகரத்தின் பெருமை.

(பெண்கல்வி.)

விஜயநகரமென்பது புராதன ஒரு விரிந்த ராஜ்யம். அது இப்பொழுது காலக்கொடுமையால் பழாகிக்கிடக்கின்றது. ஹம்பி என்கிற கிராமத்திலிருந்துதான் இந்த விஜயநகரத்தை நாம் இப்பொழுது காணலாம். இந்த ஊர் பல்லாரிக்கு 32 மைல் மேற்கே இருக்கிறது. இந்த ஹம்பிதான் இராமாயணத்தில் பம்பை என்று வருணிக்கப்பட்ட பிர

தேசம். வால்மீக மகரிஷியால் வெகு அழகாய் வருணிக்கப்பட்ட 'பம்பாஸரஸ்' என்ற குளமும் இங்குதான் இருக்கிறது. பாழடைந்து போன இந்தக் காலத்திலுங்கூட அதில் அழகிலும், பரிமளத்திலும், காத்திரத்திலும் முதல்தரமான தாமரைப்புஷ்பங்கள் மலர்கின்றன. வாலி சுக்கிரீவன் ஆண்ட கிஷ்கிந்தையும் இதுதான். ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் தசக்கிரீவனை ராவணனை ஸம்ஹாரம் செய்யவும் சீதையை மீட்கவும் உத்தேசித்து லங்கைக்குச் செல்வதற்குமுன் இந்தக் கிஷ்கிந்தையில்தான் வாசஞ்செய்தார். ஸ்ரீமந் நாராயணன் அவதாரமெடுத்துச் சஞ்சரித்த பிரதேசத்தின் அலங்காரத்தையும் பெருமையையும் சொல்லவும் வேண்டுமா?

ஹரிஹரன், புக்கன் என்ற இரண்டு ஹிந்து அரசர்கள் 14-வது நூற்றாண்டில் விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். பல துறைகளிலும் இந்த ராஜ்யம் உன்னத பதவியை யடைந்திருந்தது. சுமார் 250 வருஷகாலம் வரை ராஜ்யம் நிலைத்திருந்து கடைசியில், மகம்மதியர்களால் பாழாக்கப்பட்டுப்போயிற்று. விஜயநகரத்திலுள்ள கட்டடங்களின் அழகை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத்தரமல்ல. அந்தக் கட்டடங்களின் அழகைப் பார்த்துத்தான் சென்னபட்டணம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அக் கட்டடங்களிலமைக்கப்பட்ட ஜன்னல்கள், கதவுகள் இவைகளை வைத்துக்கொண்டுதான் சிஷோம் (chisholm) முதலான ஆங்கிலேய வாஸ்து சாஸ்திர பண்டிதர்கள் நமது சென்னைநகரத்தில் அழகாய் அமைக்கப்பட்டிருக்கும் 'ஜெனரல் போஸ்டாபீஸ்' 'செனேட் ஹவுஸ்' முதலிய கட்டடங்களை ஒருவாறு கட்டியிருக்கிறார்கள். விஜயநகரத்தின் பெருமைகளைக் கண்ணால் நேரிடக் காணவேண்டுமென்று ஆசையுள்ளவர்கள் சென்னைப் பொருட்காட்சிச்சாலைக்குச் (museum) சென்று காணலாம். அங்கு விஜயநகரத்திலிருந்து இரண்டொரு கல்நிலைகளைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். அவைகளின்மேலிருக்கும் சிற்ப வேலையை ஒரு வருஷம் முழுமையும் பார்த்தாலும் நமது கண்ணின் ஆத்திரம் குறையாது. மனமும் சோர்வடையாது. ஒரு விரல் நீளத்தில் புருஷ உருவம் செதுக்கப்பட்டு, அதற்குத் தகுந்தபடியே கை கால் முதலிய உறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே நிலையில், இராமாயண கதையில் வருகிற சகல சங்கதிகளையும் சித்திர ரூபமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஆஹா! இம்மாதிரி சிற்பவேலையை எப்படி முடித்தார்கள்? இதை வேலைசெய்ய எத்தனைநாள் பிடித்திருக்கும்? யாரால் இந்தச் சிற்ப வேலைகள் செய்தவர்களுக்குக் கூலிகொடுத்து நிர்வாகம் செய்யப்பட்டது?

என்று வெகு யோசனைகள் சகஜமாகவே ஒவ்வொரு மனிதருக்கும் தோன்றும்.

இவ்விதமாகப் பலயோசனைகள் ஒரு ஆங்கிலேய சிற்ப சாஸ்திரியின் மனத்திலுதித்தது. அவர், "இந்தச் சிற்ப வேலைகள் கூலிக்குச் செய்யப்பட்டதல்ல, எந்த ராஜன் காலத்திலோ அல்லது ராஜாக்கள் காலங்களிலோ தங்கள் திறமையை அந்நாட்டுச் சிற்பிகள் காட்டச்செய்த சிற்ப வேலையா யிருக்கவேண்டுமே யல்லாது கூலிக்குச் செய்தவையாகத் தோன்றவில்லை" யென்று சொல்லியிருக்கிறார். மேலும், தற்காலத்திய கூலி நிர்ணயத்தை வைத்துக் கணக்கிட்டுப்பார்த்தால் ஒவ்வொரு கல்லுனுக்கும் அதன்மீது செதுக்கப்பட்டிருக்கும் சிற்ப வேலைக்குமாகச் சுமார் அரை லக்ஷம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும் என்று அதே ஆங்கிலேய சிற்பசாஸ்திரி சொல்லியிருக்கிறார் பாழாய்க்கிடக்கும் காலத்திலேயே அதன் அழகையும் வேலைப்பாட்டையும் புகழ்கிற நாம் அவைகள் செவ்வையாக இருந்தகாலத்தில் எப்படிப் புகழ்வோமோ? அதை யோசித்து நாமே அறிந்துகொள்ளவேண்டியது.

விஜயநகரத்துக் கட்டடங்கள் அதிகமானவை. ஆகையால், நாம் அவைகளை வருணிக்க ஆரம்பிக்குமுன் அங்கிருக்கும் கட்டடங்களை வகுத்தறிந்து-இவ்வளவு விதம் என்று ஒரு வரம்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அவைகளைப் பெரும்பாலும் கோவில்கள், கடைத்தெருக்கள், அரண்மனைகள், கோட்டைகள், சமாதிகள் என்று பலவிதமாகப் பிரிக்கலாம்.

கோவில்கள்: விஜயநகரத்தில் அநேக ஜயினக் கோவில்கள் இருக்கின்றன. இந்த ஜயினக் கோவில்களுக்கு அடுத்தபடியாக விஜயநகர வம்சத் தரசர்கள் கட்டின கோவில்களைச் சொல்லலாம். விஜயநகரம் என்ற இந்த ராஜதானியின் முக்கிய பட்டணமும் முதன் முதலில் சிறிய பட்டணமாக இருந்தது. அது துங்கபத்ரைக்கரையில் கட்டப்பட்டு அப்புறம் நாலுபக்கத்திலும் நம் சென்னபட்டணத்தைப்போல அங்குத் தெருக்கள் எல்லாத் திக்கிலும் பெருகிற்று. அப்படிப் பெருகி வரும்போது ஒருபக்கத்தில் குடிகள் குறைய ஆரம்பித்தன. இதற்குச் சில ஆதாரங்களிருக்கின்றன. இவ்வித ஆதாரங்களைக்கொண்டும் வாஸ்து சாஸ்திரக் கண்ணைக்கொண்டும் பார்த்தால் ஹம்பிதான் முதன் முதலில் விஜயநகர வரசர்களால் அமைக்கப்பட்டதாக ஏற்படுகிறது. அந்த ஊரிலிருக்கும் தேவஸ்தானத்து தர்மகர்த்தாக்கள் அவ்வூர் கோவில் கி. பி. 1195-ம் வருஷத்தில் கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அது ஒருவாறு நிஜமாயிருக்கலாம்.

ஹம்பியில் இப்பொழுதும் பூஜை உத்ஸவம் முதலானதுகள் நடந்துகொண்டிருக்கும் பம்பாதீச்வரர் ஆலயம் ஒன்று இருக்கிறது. இதன் கர்ப்பக் கிருஹம் மிகவும் பழமையானதாகத் தோற்றுகிறது. இந்த பம்பாதீச்வரர் கோவிலைப் பரிசோதித்துப் பார்த்தால் 12, 13, 14 நூற்றாண்டுகளில் நடந்த செயல்கள் காணப்படும். இந்தக் கோவிலிலுள்ள கறுப்புக் கல்லில் நமது பழைய சிற்பிகள் செய்திருக்கும் சிற்ப வேலைகளின் திறத்தைக் கண்டு நாம் கண்குளிரவேண்டும். வெகு அழகாய் வழவழவென்று எண்ணெய் பூசியிருப்பதுபோலவே சிற்பங்கள் நமது கண்ணுக்குத் தோற்றப்படும்.

ஊருக்குத் தென்கிழக்கு மூலையில் மால்யவானம் என்ற ஒரு பர்வத உச்சியில் ரகுநாத ஸ்வாமி கோயில் இருக்கிறது. எல்லாக் கோயில்களைக் காட்டிலும் இது சிற்பத்தில் சிறந்து விளங்குகிறது இந்தக் கோயில் விஜயநகரத் தரசர்கள் அரண்மனைக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அற்புதக் கட்டடம். அதில் ஒரு மண்டபம் உண்டு. அதன் நான்கு கறுப்புத் தூண்கள் இனிமேலும் உண்டோ என்று எண்ணும்படி அக்காலத்துச் சிற்பிகள் தங்கள் வேலைப்பாட்டைத் தூணில் ஒவ்வொரு பாகங்களிலும் காட்டியிருக்கிறார்கள். மதம், சரித்திரம், கூத்து, பாட்டு, சண்டை முதலியவைகளை எடுத்துக்காட்டும் ஒவ்வொரு சித்திரமும் இந்தக் கோயிலில்தான் நாம் விசேஷமாய்க் காணலாம். ஊருக்குக் கிழக்கே துங்கபத்ரா நதிக்கரையில் விட்டலஸ்வாமி கோயிலிருக்கிறது. இந்தக் கோயிலில் காணும் சித்திரவேலை மிகவும் அற்புதம். இந்தக் கோயிலில் ஒரே கல்லால் செய்யப்பட்ட அதியுன்னதமான ஒரு ரதம் இருக்கிறது. அதன் அழகு இவ்வளவு அவ்வளவென்று சொல்லத் தரமன்று.

இவைகளல்லாது அநேக ஹநுமார் கோயில்கள் இருக்கின்றன. வாலி சுக்ரீவன் இவர்கள் ஆண்ட கிஷ்கிந்தை இந்த ஹம்பியானதால் ஹநுமார் கோயில்கள் இவ்விடத்தில் அவ்வளவு அதிகமாக ஏற்பட்டன. ஹநுமாருக்குக் கோயில்கள் மாத்திரமல்ல, ஹநுமார் சிலைகள் ஆங்காங்கு மலைமலையாய் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய ஹநுமார் விக்கிரகம் 20 அடி உயரமுள்ளதாக இருக்கிறது. இது ஹம்பிக்கு மேற்கே ஒரு வயல் மத்தியில் வெகு உன்னதமாக நிற்கின்றது. வால்மீக மகரிஷி எழுதிய ராமாயண வசனத்தை மெய்ப்பிக்க மால்யவான் பர்வதத்தில் பெரிய பெரிய குரங்குகள் கூட்டம் கூட்டமாய் வாழ்கின்றன.

கடைத் தெரு :— 800 கஜம் நீளமுள்ள அழகான கடைத்தெருக்களை இங்குக் காணலாம். பழைய காலத்தின் அழகைப் பார்க்கவேண்டு

மானால் வருஷத்தில் ஒருதடவை வரும் ஹம்பி ஜாத்ரா என்ற உற்சவத்தில்தான் காணலாம். தெருவின் இருபக்கங்களிலும் விசித்திரமான வீடுகள் அநேகம் உண்டு. இந்தக் கடைத்தெருக் கோடியில் குளங்களும், குளத்திற்குப் போகும் விசித்திர வீதிகளும், வழிகளும் பார்க்கிறவர்கள் மனதை ரமிக்கச் செய்யும்.

அரண்மனை :— பழைய அரண்மனையைப்பற்றி அப்துல் ரஜாக் என்ற ஒரு மகம்மதியர் வருணித்திருக்கிறார். அக்காலத்தில் அரண்மனையைச் சுற்றி ஏழு மதில்களிருந்ததாகவும், நாலுபக்கங்களிலும் கடைவீதிகளிருந்ததாகவும், ஊரைச்சுற்றிச் சிறுவாய்க்கால்களில் துங்கபத்ரா நதியின் தண்ணீர் ஓடினதாகவும், அரண்மனைக்கு வலதுபக்கத்தில் கச்சேரி மண்டபம் சிம்மாசனம் முதலியவை இருந்ததாகவும், இடது பக்கம் தங்கசாலை யிருந்ததாகவும் — நாணயங்கள் அச்சடிக்குமிடம் — அங்கு மோகரா வராகன் இவைகள் அச்சடிக்கப்பட்டதாகவும் வருணித்திருக்கிறார்.

கோட்டைகள் :— கோட்டையின் மதில் பதினாறுமைல் நீளமுள்ளது. அந்த மதில்கள் எல்லாம் இப்போது நாசமாகிவிட்டன.

காலத்தின் கொடுமையாலே விஜயநகர ராஜ்யம் பாழாகிவிட்டது. விஜயநகரத்தின் தேவாலயச் சிறப்பும், சிற்ப வேலைப்பாட்டின் திறமையும் அதன் பெருமையும் சுமார் 350 வருஷங்களுக்கு முன் மேலோங்கி இருந்ததென்று தெரிகிறது.

கி. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

மருத்துவப் பெட்டி.

(பதார்த்தகுண சிந்தாமணி.)

பசுவின் பால் பொதுக்குணம்.

பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணாளி
சூலையர் மேகத்தோர் துர்ப்பலத்தோர் — ஏலுமிவர்
எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

இ-ள். நற்குணமுடையவளே! பசுவின் பாலானது, பாலர், கிழவர், பழமைபட்ட சுரமுடையவர், புண்கொண்டவர், சூலைநோயினர், மேகநோயினர், பலவீனர், உடம்பிளைத்தவர் ஆகிய இவர்களெல்லார்க்கும் நன்மை பயக்குமென்க.

பகல் பசுவின்பாற் றுணம்.

பகற்பால் சிசுக்கட்குப் பக்குவமென் றாலும்
விகற்பமோ டைப்பெருக்கு மெய்யே — யெதற்குமிகத்
தீதடரச் செய்யுமித்தாற் சோருட் காய்ச்சலனல்
தீரதவிழும் பூங்குழலே சாற்று.

இ-ள். மகரந்தங்க ளுதிர்கின்ற மலரணிந்த கூந்தலையுடையவளே! பகற் பசுவின் பாலானது குழந்தைகளுக்குப் பக்குவமாமென்றாலும் பற்பல கபநோயை யுண்டாக்கும்; தாம்பூலம், புளிப்பு முதலியவை சேருமிடத்துக் கெடுதியைச் செய்யும். இப்பாலினால் உட்காய்ச்சலும் வெப்பமும் நீங்குமென்க.

இராப் பசுவின்பாற் றுணம்.

* பகற்பசும்பால் காய்ச்சிப் பருகி னழலும்
இகற்கபமு மீளையுமி ராவாம் — புகல்பித்த
வேகமும்போ மேனியெல்லா மேவியிடுந் தாதுவுமாம்
போகமுமுண் டாகும் புகல்.

இராவின்பால் கண்ணி லெழுபிணிபோக் கும்பின்
பாவியநோ யும்போக்கும் பாரில் — விரகமுற்றூர்க்
கத்தியம் பன்னவிழி யாயிழையே யாவருக்கும்
பத்தியமா மென்றைக்கும் பார்.

இ-ள். கடலையும் அம்பையுமொத்த கண்களையுடைய பெண்ணே! பகலிற் சுரந்து இரவில் கறக்கின்ற பசுவின் பாலை முறைப்படி காய்ச்சி யருந்தினால், தேக அழற்சி, கபரோகம், சுவாசம், பித்தகோபம், நேத்திர வியாதி, விந்துவின் கெடுதியாலுண்டான சிற்சில நோய்கள் ஆகிய இவைகள் நீங்கும். உடம்பில் மினுமினுப்பும், சுக்கிலப் பெருக்கமும், போக விருப்பமும் உண்டாகும். இது யாவர்க்கும் பத்தியத்திற் குதவுமென்க.

* பகல் முழுவதும் சுரந்திருந்து இரவில் கறப்பது பகற் பாலாம்.

எருமைப் பாற் றுணம்.

வாதத் திமிரை வரவழைக்கும் புத்தியினற்
போதத் தெளிவைகனி போக்குங்காண் — கோதற்றே
அங்கத் தறுமருந்தை யன்றே முறித்துவிடும்
பங்கத் தறுமேதிப் பால்.

இ-ள். எருமைப்பால் திமிர்வாயுவைத் தருவிக்கும். புத்தியின் தெளிவைப் போக்கும். நல்ல மருந்தின் குணத்தையும் கெடுத்துவிடு மென்க.

ஓர் எச்சரிக்கை.

புதுவையில் சில தினங்களுக்கு முன் சுமார் 19 வயதுள்ள சிறவ னொருவன், இரண்டு மூன்று நாட்களாகத் தனக்கு வயிறு வலிக்கிற தென்று பேதிக்கு (Sodium Sulphate) என்னும் உப்பு சாப்பிட்டான். சாப்பிட்டதும் ஒருதரம் வாந்தியாக உடனே அவனுக்கு ஓர்விதமான இழுப்பு உண்டாயிற்று. பேதி மருந்தில் ஏதோ கெடுதியென்று நினைத்து அவனது பெற்றோர் உடனே அவனை இராசாங்க வைத்தியசாலை (Hospital)க்குச் சிகிச்சைக்காகக் கொண்டுபோனார்கள். அங்கு இரா சாங்க வைத்தியர் (Doctor) பார்த்து, பிழைக்கமாட்டான் என்று சொல்லிவிட, அவன் தன் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு உடனே இறந்துவிட்டான். வைத்தியர் (Doctor) அவன் உட்கொண்ட பேதி மருந்தைப் பரிசோதிக்கச்செய்ய அதில் யாதொரு குற்றமும் இல்லாத தால் அவனுடம்பு அறுத்துப் பரிசோதிக்கப்பட்டது. அவன் உட்கொண்ட உப்பு ஜீரணமாகாமல் நெஞ்சில் அப்படியேயிருக்க, அவன் வயிற்றில் நூற்றுக்கணக்கான நாக்குப்பூச்சிகள் பந்துபந்தாக இருத்தலைக் கண் டார்கள்.

கசப்பான உப்புபடவே நாக்குப்பூச்சிகளனைத்தும் புரண்டு வேலை செய்யத் தொடங்கியதால் சுவாசம் நின்றுவிட மரணமடைந்தான் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதனால் எவ்வித நோய்கொண்டவர்களுக்கும் முதலில் நாக்குப் பூச்சி மருந்து கொடுத்துவிட்டு, பிறகு மற்றச் சிகிச்சைகளைச் செய்தல் வேண்டும் என்று வைத்தியர் (Doctor) தெரிவிக்கிறார்.

நாக்குப்பூச்சிகள் வயிற்றிலிருந்தால், எந்த மருந்தும் வேலைசெய் யாதாம். வைத்தியர்களும் உடம்பிலுள்ள நோயைக் கண்டுபிடிக்க முடியாதாம்.

ஓர் மருத்துவன்.

மைலத்திற்கு வடமேற்கில் ரு-மைல் தூரத்திலுள்ள மேலைச்சேலூர் சிவன் கோயில் கல்வெட்டு.

(சுவஸ்திஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் நாமாதரும் அடல்சூழ்ந்த ஜயமாதரு மமர்ந்துவாழ தெந்நவருஞ் சேரலருஞ் சிங்களரு

முதலாய மன்னவர் திறைகுணாநது வந்திண்டிச் சேவிப்ப வாழி யூழிவருஞ் செங்கோல்=க-வரி=ஏழுபாருமினிதளிப்பசெம்பொன்வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோஇராச கேசரி பன்மரான திருப்புவநச சககரவத்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவற்கு யாண்டு கங-ஆவது கற்கடகஞயிற்றுப்பதின்மூன்ருந் தியதியா=உ-வரி=ன புதன்கிழமையு மபாபக்ஷத்து ஏகாதசியும் பெற்ற ரோகணி நாள் செங்கேணி அம்மை யப்பன் பாண்டியா ன ராஜராஜச் சம்புவராயனேன் ஜயங்கொண்ட சோழமண்டலத்து உததமசோழவளநாட்டுச்சேவூர் திருத்தாந்தோன்றி ஆளுடையார்க் = ௩-வரி = கு அர்ச்சன சேஷமாக நான் விட்ட நிலமாவது இம்மண்டலத்து ஒய்மா நாடான விஜய ராஜேந்திர சோழ வளநாட்டு ஆமூர்நாட்டு ஆர்க்கராமூரான ராஜேந்திர சோழநல்லூரிலே எங்கள் பாட்டனர் அம்மை யப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொ=௪-வரி=ண்டார் ஊரார் பக்கல் விலைகருக் கொண்டுடைய மனையும் விளை நிலமும் தோட்டமும் அனுபவித்தவாரானிற்க இத்தேவற்கு அஞ்சாவது பழங்காணியாள் செ(ய) பெறுவதாக பிரசாதஞ் செய்தருளிந திருமுகமும் உளவரியும் பெற்று ஊரார் தங்களிலே ஸம்ஹரிக்கிறபோது என்காணி எனக்கே ப = ௫-வரி = பிரமாணம் பண்ணித்தந்த பிரமாணப்படி ஸ்ரீ மெய்க்கீர்த்தி எழுதி திரிபுவனச சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்கரு யாண்டு ௫-ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலதது ஒய்மாளுடான விஜயராஜேந்திர சோழ வளநாட்டு ஆமூர்நாட்டு ஆர்க்கராமூரான ராஜேந்திர சோழநல்லூர் சோம அம்மை அப்=௬-வரி=பன் பாண்டியான ராஜராஜ சம்புவராயர்க்கு நாங்கள் பூமி பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது எங்கள் பககல் இவர் பாட்டனர் அம்மை அப்பன் குலமாணிக்கம் பாண்டிநாடு கொண்டார் முன்பு வஸ்து விட்டுக்கொண்ட மனை வடக்கிற் தெருவில் வடசிறகில் ராஜேந்திர சோழப் பெரு = ௭-வரி = ந் தெருவிக்கு மேற்குக் கங்கைகொண்ட சோழப் பெருந்தெருவுக்குக் கிழக்கு மனை எழிநாற் கீழ்மேல் கோல் உக ககு வாசல் நீளங் கோல் எழாக குழி ௱௪௧-ம் தோட்டத்தில் ஸ்ரீ தேவிவதிககு மேற்கு கருணாகர வாய்க்காலுக்கு வடககு ஆறூங் கண்ணாற்றில் நாலாஞ் சதுரத்து தெற் = ௮-வரி = கடைய நிலம் நாலுமாவிற் கிழக்கடைய நிலம் ௱கஉ குழி கொண்டது ஒருமாவாக வந்த கிலம் இரண்டுமாவும் இககண்ணாறு அஞ்சாஞ் சதிரதது மூங்கிற செறு நிலம் எட்டுமாவும் இவ் வாண்டு பழங்காணி அளபொ பெறுகவென்று எங்கள் ஸொமமான பூமிக்கு பிர=௯-வரி=ஸாதஞ் செய்தருளின திருமுகமும் உள்வரியும் பெற்று எங்களில் ஸம்ஹரிக்கிற இடத்து இவற்கு இம்மனையுந் தோட்டமும் விளை நிலமும்

முன்பு நாங்கள் குடுத்தபடியே மேனோக்கி மரமுங் கீனோக்கி கிணறும் இவற்றொடு விற்றொற்றி பிரதிக் கிரயதாநங்களுக்கு உரித்தாவதாக ஸ=௧௦-வரி= ம்மதிர்தக் குடுத்தோம் ஆர்க்காடூரான ராஜேந்திர சோழநல்லூர் ஊரோம் இவர்கள் பணியால் எழுதினேந் ஊர்கணக்கு ஆர்க்காடூருடையான் பொன்மலை கற்பகத்தான் எழுத்து இப்படிக்கு ஊருவை வல்லங்கிழான் சாந்திநாதன் குமரனெழுத்து இவைகூடல்கி = ௧௧ = ழான்கண்டி மேற்றிசை நின்றான் எழுத்து இவை நிலம்பேறு கிழவன் வயிரிலை யக்ஞையானமைக்குப் பொன்மலை கற்பகத்தின் எழுத்து மலையம் பாக்கிழான் ஆட்கொண்டான் மேற்றிசை நின்றான் எழுத்து இது கொற்றமுழான் புத்தன் கதிராயிரமுடையான் =௧௨-வரி= ஸம்க்ஞையானமைக்குப் பொன் மலை கற்பகத்தின் எழுத்து இவை நெற்குன்றங்கிழான் நாயகன் ஆட்கொண்டா னெழுத்து இவை இலததமுழான் நாயகன் நாராயணதேவன் எழுதது சேலூர் இலததமுழான் நாயகன் நாராயணதேவன் எழுதது இம் மனையும் தோட்டமும் விளைநிலமும் இத் தேவர்க்கு அர்ச்சனா சேஷமாகக் குடுத்தேன் இதுக்கு அழிவுசெய்வார் கெங்கையிடைக் குமரியிடை செய்தார் செய்த பாவங்கொள்வார் அறமறவற்க அறமல்லது துணை இல்லை அறமே துணை இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

இக் கல்வெட்டின் கண்ணுள்ள வடவெழுத்துக்களைத் தமிழ் எழுத்துகளாய் மாற்றி எழுதியுள்ளேன்.

திரு. சுப்பிரமணியதேசிகர்,
சிலாசாசன பரிசோதகர், காஞ்சிபுரம்.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ௪, இதழ் ௧௧ – ௧௨, 267-ம் பக்கத் தொடர்ச்சி.)

௪௯. எவர்கள் மூடர்களாய், பலாத்காரமாக மனதினுடைய ஜயத்தைச் செய்தற்குப் பிரயத்தனப்படுகின்றார்களோ அவர்கள், மதங்கொண்ட யானையைத் தாமரைத்தண்டின் நூலினாலே கட்டுபவர்களை ஒத்தவர்களாகின்றார்கள்.

முக்கிய சாதனங்களை விட்டு மூர்க்கர்களாய் மனதை ஜயிப்பதற்கு எத்தனிக்கின்றவர்கள், மதயானையைத் தாமரை நூலினாலே கட்ட எத்தனிப்பவர்களோடு சமானர்கள் என்றவாறு.

அப்படிச் செய்ய முடியாதாதலின், இச்சாதனங்கள் நான்கினாலே மனதை வெல்ல எத்தனிக்கவேண்டுமென்பது கருத்து.

(சித்தத்திற்குள்ள பீஜங்களைக் கூறுகின்றார்.)

௬௦. காமாதி விருத்திகளெனும் கொடிகளைத் தரித்துள்ள சித்தமென்னும் விருக்ஷத்திற்கு இரண்டு பீஜங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று பிராணசாஞ்சல்யம். இரண்டாவது கெட்டியாக ஊன்றிக்கொண்ட மலின சம்ஸ்காரம்.

காமாதி விருத்திகளுள்ள இச் சித்தத்திற்கு, பிராணஸ்பந்தம், திடமான சம்சார சம்ஸ்காரம் என்னும் இரண்டு காரணங்கள் உளவென்றாரென்க.

இவ்விரண்டினாலேயே அநாதியாயும் அநந்தமாயும் அழிவில்லாததாயும் இச் சம்சார விருக்ஷம் வேரோடியுள்ளதென்பது கருத்து.

௬௧. எவற்றினும் நிறைந்துள்ள அந்த சித்பிரபை, பிராணசாஞ்சல்யத்தினால் சலிக்கச் செய்யப்படுகிறது. எதனாலெனில், சொல்லப்பட்ட அந்த ஞானம் மனதின் ஏகாக்கிரத்தினாலே உதிக்கின்றது.

பிராண சாஞ்சல்ய நிரோதனம் இல்லாமற்போவதினாலே மனோ விருத்தி நில்லாமல் அம்மனதோடுகூட அதற்கு அதிஷ்டானமாகிய ஞானமும் சலிக்கின்றதுபோலக் காணப்பட்டுக்கொண்டிருக்கும். பிராண சாஞ்சல்ய நிரோதனத்தினால் மனோநிரோதனமாகவே அப்போது மனது சலனமொழிந்து பிரம்மாகாராகாரிதமாய் ஞானரூபமா யிருக்குமென்றாரென்க.

(வரும்.)

ஓர் ஆரியன்.

நியாயமாலா.

2-வது சதகம்.

(வெண்டாமரை ௪, இதழ் ௧௧ – ௧௨, 270-ம் பக்கத் தொடர்ச்சி.)

3. பந்த முக்த மகிபால நியாயம் :— பந்த முக்த மகிபாலன் = கட்டுப்பட்டு விடுபட்ட அரசன், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது பூர்வபக்ஷியின் சித்தாந்தம் முற்றும் மறுக்கப்பட்டுப்போக, மீண்டும் வேறு வகையாகப் பூர்வபக்ஷியைத் திருப்திசெய்வித்த விது போலவென்கின்றது. அதாவது: தன்னால் ஜெயிக்கப்பட்டுச் சிறையி லடைபட்டிருந்த அரசனை வெளியில் விட்டு ஒரு கிராமத்தையுங் கொடுத் துத் திருப்திசெய்வித்தல்போல வென்கின்றது.

4. சாலினி நியாயம் :— சாலினீ = சல்லடை, நியாயம் = திருஷ் டாந்தம்.

இது எடுத்துக்கொண்ட இலக்கியத்திற்குக் கூறிய இலக்கணத் தின்கண்ணுள்ள தோஷமானது, ஒருவகையால் பரிகரிக்கப்படினும் வேறு பல் வகையால் தோஷம் புலப்பட விதுபோல வென்கின்றது. அதாவது: சல்லடையின் ஒரு துவாரம் அடைக்கப்படினும் மற்றுள்ள துவாரங்களாம் அதன்கணுள்ள வஸ்துக்கள் வெளியாதல்போல வென் கின்றது.

5. பகபந்தன நியாயம் :— பகம் = கொக்கு, பந்தனம் = கட்டு, நியாயம் = திருஷ்டாந்தம்.

இது ஒரு வஸ்துவின் அடைவின் பொருட்டுக் கைக்கொண்ட உபாயம் பரிகசித்தற் கேதுவாத விதுபோல வென்கின்றது. அதாவது: கொக்கைப் பிடிக்க முயன்ற ஒருவன் அதன் தலையில் வெண்ணெயை வைத்து அது உருகி அதன் கண்ணில் விழுந்து கண் மறைபட்டபின் அதைப் பிடிக்க நினைப்பதுபோல வென்கின்றது.

(வரும்.)

இதோபதேசி.

சந்நியாச விஷயம்.

(வெண்டாமரை ச, இதழ் க0, 226-ம் பக்கத் தொடர்ச்சி.)

சங்கை :— யஜ்ஞோப வீத தாரண ரூப உபநயன சம்ஸ்கார முடையார்க்கே வேதத்தை ஓதலி லதிகாரமுண்டு. ஏனையோர்க்கின்று. "ஸ்திரீ, சூத்திரர்களுக்கு அத்தியயனம் செய்வது கூடாது" என்னும் சுருதியுமுளது. "தத்துவமசி" முதலிய வேதத்தின் கண்ணுள்ள மகா வாக்கியங்களாற்ருன் பிரம்ஹ சாக்ஷாத்காரமுண்டாம். அவ் வேதவாக்கி யங்களின் சிரவணத்தில் அநதிகாரிகளாவதால் ஸ்திரீ சூத்திரர்களுக்கு பிரம்ஹ சாக்ஷாத்கார மெங்ஙனமுண்டாம்.

சமாதானம்:— "ஸ்திரீகள், வைசியர்கள், சூத்திரர்களாகியவர்களும் மேலானகதியை யடைகிறார்கள்" என்று ஸ்ரீ பகவானால் ஸ்திரீ சூத்திரர்களுக்கும் மோக்ஷப் பிராப்தி கூறப்பட்டிருக்கிறது.

"எந்தப் பிரம்ஹ வித்தையால் எல்லாம் பெறுகிறார்களோ அதை மனிதர்கள் எண்ணுகிறார்கள்" என்னும் சுருதியானது மனிதமாத்திரத்திற்கே பிரம்ஹ வித்தையால் சர்வான்ம பாவப் பிராப்தி கூறுகின்றது.

அந்தப் பிரம்ஹ ஞானம் வேதாந்த சாஸ்திரத்தின் சிரவணத்தானன்றி நிகழாது.

இதனால் வேதாத்தியயனத்தின்கண் அதிகாரமுள்ள பிராம்மணாதி மூவருணத்தவர்க்கும் உபநிடத வடிவான வேதாந்த சாஸ்திர சிரவணாதிகளானே பிரம்ஹ ஞானப் பிராப்தமாம். ஆனால் கீழ்ப்போன அநந்த ஜன்மங்களில் செய்துள்ள புண்ணிய கருமத்தால் தூயமனத்தினரான ஸ்திரீ சூத்திரர்கட்கோ, வேதாந்தத்தைப் பிரதிபாதிக்கும் புராணாதிகளின் சிரவணத்தானே பிரம்ஹ ஞானமுண்டாகின்றது. இதனானே இதிகாச புராணங்களில் விதுரர் முதலிய சூத்திரர்களுக்கும் பிரம்ஹ ஞானப் பிராப்தி கூறப்பட்டிருக்கின்றது.

அன்றியும், வேறு சில கிரந்தக்காரர் கூறும் சமாதானம் வருமாறு:— பிரகதாரண்ய உபநிடத்தின்கண் யாஜ்ஞவல்கியர் தமது காதலியாகிய மைத்திரேயிக்கு; சாக்ஷாத் சுருதி வசனங்களினாலே பிரம்ஹ வித்தையை யுபதேசித்திருக்கின்றனர். கார்க்கிக்கும் யாஜ்ஞவல்கியருக்கும் நடந்த சம்வாதம் அவ் வுபநிடதத்தில் பிரசித்தமாயிருக்கிறது.

ஆகையால் வேதாந்த சுருதிகளின் சிரவணத்தில் ஸ்திரீகளுக்கும் அதிகாரமுண்டு. ஆனால் உபநயன சம்ஸ்காரமில்லாமையால் வேதாத்தியயனத்தின்கண் அதிகாரமில்லை. முதலில் குருவால் உச்சரிக்கப்பட்ட வாக்கியங்களைப் பின்னர்ச் சீடனால் உச்சரிக்கப்படுதல் அத்யயன மெனப்படும்.

ஸ்திரீகளுக்கு வேதாந்த சிரவணத்தின் கண்ணும் அதிகாரமில்லையாயின், யாஜ்ஞவல்கியர் மைத்திரேயி முதலியோர்க்கு, சாக்ஷாத் வேத வாக்கியங்களால் பிரம்ஹ வித்தையை உபதேசித்திரார். இந்த யாஜ்ஞவல்கிய மைத்திரேயிகளின் சம்வாதத்தை ஆன்மபுராணம் ஏழாவது அத்தியாயத்தின்கண் தெளிவாய்க் காணலாம்.

(வரும்.)

இதோபதேசி.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்க விரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல்போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதன் விலை அணா 8. கேட்லாக் வேண்டியவர் ½ அணா தபால் லேபில் அனுப்பவேண்டும்.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித கற்பனாலங்காரக் கதை; இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ் வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடாநகைப்பை விளைவிக்கும்.

இதன் விலை அணா 2. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். தனிப் புத்தகம் வேண்டுவோர் 2½ அணா தபால் லேபில் அனுப்ப வேண்டும்.

அதிக பக்ஷமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கத் தக்கது :—

நாவல் படிக்கவேண்டுமானால் இப்பேர்க்கொத்த நாவலையல்லவோ படிக்கவேண்டும். அது என்ன நாவல்? நமது ரங்கராஜூ அவர்களால் எழுதிய நான்கு நாவல்கள்.

இராஜாம்பாள்	0 — 12 — 0
ஆனந்த கிருஷ்ணன்	0 — 12 — 0
சந்திரகாந்தா	0 — 12 — 0
மோஹனசுந்தரம்	0 — 12 — 0

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி ஜீரண சக்தியை விருத்திசெய்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ரத்த சுத்தி ரத்த விருத்திசெய்து தேக பலத்தைக் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மூத்திர சம்பந்தமான பிணிகளை நீக்கி காப்புஸ்தானங்களைப் பலப்படுத்துகின்றன

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

புத்தி தீக்ஷணியத்தையும் மனோற்சாகத்தையும் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

சரீர சம்பந்தமான வியாதிகளை யெல்லாம் குணப்படுத்துகின்றன.

32 மாத்திரை கோண்ட டப்பி 1-க்கு ரூ. 1.

வைத்தியசாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.